முருகப்பெருமான் துணை

**மகான் நம்மாழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.04.2023**, புதன்கிழமை

1. தவராஜனே ஞான தேசிகனே
தரும பலம் கொண்ட அரங்கனே
அவதாரம் வேலவன் சக்தியாக
அகிலமதில் வந்த குருராசனே
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சேல் திங்கள்
வரமென இருபானீர் திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் **22** ம் நாள் **05.04.2023**, புதன்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை நம்மாழ்வார் யானும்
அங்கன் தொண்டர்கள் வளமுற
ஆசிதனை வரமாக அருள்வேன்
அரங்கன் தொண்டர் படைகள்
4. படைகள் உலகம் எங்கிலும்
பலமாக வளர்ந்து நிற்க
சோடையான நிலைகள் இன்றி
சுபிட்சமும் வளமும் காண்கும்
5. காண்கவே அரங்க மகானின்
கரங்கள்பட தீட்சை ஏற்க
ஆன்மீக மெய் ஞானபலமாக
ஆறுமுகனார் ஆசி தயவுமாக
6. ஆகவே சக்திகள் பெருகியே
அவரவர் தேவைகள் பூர்த்திபட
வகைபட தேக மனபலமுடன்
வளர்ச்சியான பொருள்பலமும் ஆகி

7. ஆகியே அரங்கன் நோக்கமான
அன்னதான சேவையும் பெருகி
மகிழவே மக்கள் அனைவரின்
மறுக்கவிலா பசிபிணி விரட்டி
8. விரட்டியே அரங்கன் படைகள்
வையகம் எங்கும் காக்கும்
புரட்சி மிகுந்த படைகளாக
புண்ணியம் வளர்க்கும் வண்ணம்
9. வண்ணமுடன் சேவைகள் பெருகி
வருங்காலம் மாற்றம் காணும்
மண்ணுலகம் அரங்கன் தலைமை
மகத்துவம்பட கண்டுத்தேறி
10. தேறியே உலகினையே மாற்றும்
தெய்வபலமாக உருவெடுத்து
மாறுதலை சகலத்துறைகளிலும்
மகான் அரங்கன் சபைஅமைத்து
11. அமைத்து மக்கள் விரும்பும்
ஆற்றல் மிக்க ஞானத்தலைமை
அமைத்து ஞான ஆட்சி மலரும்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

—சுபம்—